**OS.3/2023**

**நாள். 20.04.2026.**

**பி.வா.சா.2 – முகம்மது இர்ஷாத்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.53/5 ஏ. சர்வே எண்.53/5 ஏ–ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் தெரியாது. எங்கள் சொத்தான 62 ½ சென்டுக்கு நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.15 கிரைய ஆவணத்தின் மூலம் வள்ளியம்மாள் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் வள்ளியம்மாளிடமிருந்து என் தாயார் கிரையம் பெற்ற வழியில் பாத்தியம். என் தாயார் பெயர் சித்திபரீதா. சித்திபரீதாவும், அக்பர்அலியும் சகோதர, சகோதரி. சித்திபரீதாவும், அவரது சகோதரர் அக்பர்அலியும் 1990ம் ஆண்டு 1 ஏக்கர் 25 சென்டு இடத்தை வள்ளியம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார்கள். என் அம்மா சித்திபரீதாவும், மாமா அக்பர்அலியும் கூட்டாக கிரையம் பெற்ற 1 ஏக்கர் 25 சென்டை பாகம் பிரித்துகொண்டார்களா என்றால் பிரித்துக்கொண்டார்கள். பாக ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்களா என்றால் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த பாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அமீர்அலிக்கு எவ்வளவு சென்டு இடத்தை கிரையம் கொடுத்தோம் என்றால் 5 சென்டு. அமீராவுக்கு எவ்வளவு சென்டு கிரையம் கொடுத்தோம் என்றால் 14 சென்டு. இரஜபுநிஷாவுக்கு எவ்வளவு சென்டு கிரையம் கொடுத்தோம் என்றால் 7 சென்டு. எங்கள் பாகத்திற்கு கிடைத்த 62 ½ சென்டு நிலத்தில் 26 சென்டு நிலத்தை கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். மீதி 36 ½ சென்டுதான் எங்கள் கைவசம்

உள்ளது என்றால்சரிதான். என் தாயார் 36 ½ சென்டில் எவ்வளவு விஸ்தீரணத்தில் வீடு கட்டினார் என்றால் 5 சென்டு இருக்கும். மீதி 31 ½ சென்டு காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். வள்ளியம்மாள் தான் கிரையம் பெற்ற சொத்தில் ஏற்கனவே கிரையம் கொடுத்ததுபோக மீதமுள்ள இடத்தை கடைசியாக என் தாயார் சித்திபரீதாவுக்கும், அவரது சகோதரர் அக்பர்அலிக்கும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வள்ளியம்மாள் 10.08.1961 ம் தேதியில் சர்வே எண்.53/5 ஏ—ல் 3 ஏக்கர் 37 ½ சென்டை கிரையம் பெற்றுள்ளார் என்றும், வள்ளியம்மாளால் விடப்பட்ட தென்வடல்பாதைக்கு கிழக்காகவும், வள்ளியம்மாள் நிலத்திற்கு மேற்காகவும் உள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாதைக்கு கிழக்கே உள்ள சொத்துக்கு தனி சர்வே எண்ணும், மேற்கே உள்ள சொத்துக்கு ஒரு சர்வே எண்ணும் இருக்கும் என்றால் சரிதான். வள்ளியம்மாள் சர்வே எண்.53/5 ஏ —ஐ குறிப்பிட்டுத்தான் என் தாயார் மற்றும் அவரது சகோதரர் அக்பர்அலிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வள்ளியம்மாள் தான் கிரையம் பெற்ற 3 ஏக்கர் 37 ½ சென்டு தவிர்த்து கூடுதலாக 62 ½ சென்டை சேர்த்து 4 ஏக்கர் என் தாயாருக்கும், அவரது சகோதரர் அக்பர்அலி, வேலுச்சாமி, செல்வம், நாகவள்ளி, தங்கசாமி, நாகு, ராமு, நேதாஜி ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 3 ஏக்கர் 37 ½ சென்டுக்கு கூடுதலாக 4 ஏக்கர் நிலம் வள்ளியம்மாள் கிரையம் கொடுத்துள்ளதால், வள்ளியம்மாளுக்கு 4 ஏக்கர் எப்படி பாத்தியம் என்பதைக்காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் கைவசம் உள்ள 31 ½ சென்டில் வாதிக்கு பாத்தியப்பட்ட 23 ½ சென்டை நாங்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 முதல் 20 வரையிலான ஆவணங்களில் கண்ட சொத்து வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தாயார் மற்றும் அவரது சகோதரர் கிரையம் பெற்ற சொத்தில் என் தாயாருக்கு பாகமாக கிடைத்த 62 ½ சென்டில்தான் நாங்கள்

பி.வா.சா.ஆ.18 முதல் 20 வரையிலான ஆவணங்கள் மூலம் 26 செண்டு நிலத்தை கிரையம் கொடுத்துள்ளோம் என்றும், அந்த இடத்தில்தான் அந்த ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்ற நபர்கள் வீடுகட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றும், எங்கள் தாயார் வீடுகட்டி அனுபவித்து வரும் 5 செண்டு இடம் தவிர மீதமுள்ள 31 ½ செண்டில் வாதியின் இடம் 23 ½ செண்டு உள்ளது என்றும், அந்த இடத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. UDR ன் போது வள்ளியம்மாள் பெயரில் கூடுதல் விஸ்தீரணத்திற்கு பட்டா ஏற்பட்டதால் அவர் அதை சாதகமாக பயன்படுத்தி தனக்கு கிரைய பாத்தியமான இடத்திற்கு கூடுதலாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்த கிரையம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதியின் 23 ½ செண்டு இடத்தை நாங்கள் ஆக்கிரமித்து எங்கள் கைவசம் வைத்துள்ளதால் அந்த இடத்தை நாங்கள் வாதிவசம் ஒப்படைக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.